

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | டிசம்பர் 06, 2018 | புரட்சி 17 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00

# 30க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஓரணியாய் கருஞ்சட்டையுடன் திரளுகிறார்கள்

# டிச.23இல் கருஞ்சட்டை கடலாகிறது, திருச்சி

திருச்சியில் டிசம்பர் 23ஆம் தேதி பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கருஞ்சட்டைப் பேரணியும், மாநாடும் திட்டமிடப்பட்டுள்ளது. பெரியாரை ஏற்றுக் கொண்ட தமிழ் தேசிய அமைப்புகள் - முற்போக்கு அமைப்புகள் - பெரியாரிய அமைப்புகள் இணைந்து பெரியாரே தமிழர்களின் ஒற்றை அடையாளம் என்று பார்ப்பனிய இந்துத்துவ வாதிகளுக்கு பிரகடனப்படுத்துவதே இந்தப் பேரணியின் நோக்கம்.

கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தமிழ்நாடு முழுதுமிருந்தும் திருச்சி நோக்கி தனிப் பேருந்து வாகனங்களில் திரண்டு வர தயாராகி வருகிறார்கள். அண்மையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்ட தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், தமிழ்நாடு முழுதும் திராவிடர் விடுதலைக் கழக மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டங்கள் வழியாக தோழர்களை சந்தித்து வருகின்றனர். அப்போது திருச்சி கருஞ் சட்டைப் பேரணியில் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறார்கள். கழகத் தோழர்கள் தனிப் பேருந்து வாகனங்களில் திருச்சி நோக்கி திரண்டு வருவதாக உறுதி அளித்துள்ளனர்.

இது தவிர கூட்டமைப்பு சார்பில் திருச்சி, கோவை, பொள்ளாச்சி, சென்னை மாவட்டங் களில் பேரணி மாநாடுக்கான திட்டமிடல் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. திருச்சியில் நடந்த திட்டமிடல் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டார்.

### சென்னை

சென்னை மாவட்டத்துக்கான திட்டமிடல் கூட்டம் கடந்த டிசம்பர் 2ஆம் தேதி மாலை 4 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையத்தில் நடந்தது. 30க்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சார்ந்த 50 தோழர்கள் பங்கேற்றனர்.

கழக சார்பில் விடுதலை இராசேந்திரன், தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி பங்கேற்றனர். ‘மே 17’ இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழக மக்கள் முன்னணி தலைவர் பொழிலன், பேரணி தேதி டிசம்பர் 23ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாற்றப்பட் டுள்ளதையும் பேரணி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்தும் பேசினார். தமிழர் விடியல் கட்சித் தலைவர் டைசன், திருச்சி, கோவை, பொள்ளாச்சியில் நடந்த திட்டமிடல் கூட்டங்களின் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டார். த.பெ.தி.க. சார்பில் பங்கேற்ற குமரன், மாநாடு பேரணி செலவுக்கான தொகையை மாவட்ட ரீதியாக ஒதுக்கி அறிவித்தால் நன்கொடை திரட்டும் பணி இலகுவாகும் என்று முன் வைத்த கருத்தை ஏற்றுக் கொண்டனர். சென்னை



திருப்பூரில் சுவரெழுத்து

மாவட்டம் சார்பில் ரூ.2 இலட்சம் நிதி திரட்டுவது என முடிவெடுக்கப்பட்டது. தமிழகம் முழுதும் சுவரெழுத்துக்கள் எழுது வதற்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. சுவரெழுத்து வாசகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் வசூல் - சுவரெழுத்து - பரப்புரைப் பணிகளை மேற்கொள்ள 13 தோழர்களைக் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டு திராவிடர் விடுதலைக் கழக தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி குழுவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். குழுவினர் அடுத்தடுத்து கூடி களப்பணிகளைத் திட்டமிடுவார்கள். பங்கேற்ற அமைப்பின் பிரதிநிதிகள் அமைப்பு சார்பாக நன்கொடைகளை அறிவித்தனர்.

பேரணியில் அனைவரும் கருஞ்சட்டை அணிந்து வரவேண்டும் என்றும் அமைப்பின் கொடிகளை எடுத்து வரலாம் என்றும் கூட்டமைப்பு ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

பார்ப்பனிய இந்துத்துவாவிற்கும் பார்ப்பனிய இந்தியத்துக்கும் எதிரான தமிழர்களின் அடையாளம் பெரியார் தான் என்றும் எனவே பெரியார் நினைவு நாளில் கருஞ்சட்டையோடு திரண்டு எதிரிகளுக்கு தமிழினத்தின் ஒன்றுத் திரட்சியை வெளிப்படுத்தவே இந்தப் பேரணி, மாநாடு என்றும் பொழிலன் நோக்கத்தை விளக்கிப் பேசினார். இந்த முயற்சிக்கு கலைஞர்கள், புலமையாளர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது என்றும் அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்ததாகவும் பொழிலன் குறிப்பிட்டார். பல்வேறு அமைப்பின் தலைவர்களும் மாணவர் அமைப்பினரும் வரவேற்று உரையாற்றினர்.

பேரணி மாநாட்டை விளக்கிடும் துண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பல்வேறு அமைப்பினரும் துண்டறிக்கை களை ஆர்வத்துடன் பெற்றுச் சென்றனர். திருச்சிப் பேரணி மாபெரும் வெற்றிப் பேரணியாக பார்ப்பனிய மதவெறி சக்திகளுக்கு ‘காவி எங்கள் நிறமல்ல; கருப்பே எங்கள் நிறம்’ என்று உணர்த்தும் பேரணியாய் அமையும். அதற்கான சுறுசுறுப்பான களப்பணிகள் தொடங்கிவிட்டன.

## கொளத்தூர் புலியூரில் நவ.27 மாவீரர் நாள்





இளமை சுகங்களை எல்லாம் துறந்து எதிர்கால சந்ததிகளுக்காக தம் நிகழ்காலத்தைப் பணயம் வைத்துப் போராடி தம் இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்கும், தமிழ்ப் பொதுமக்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் மாவீரர் நாள் வீரவணக்க நிகழ்ச்சி 27.11.2018 அன்று மாலை 5.00 மணிக்கு கொளத்தூர், புலியூர் பிரிவில், தளபதி பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நடைபெற்ற இந்த மாவீரர் நாள் வீரவணக்க நிகழ்ச்சிக்கு ஈரோடு ப. இரத்தின சாமி தலைமை வகித்தார். சேலம் மேவி.குமார், த.சரவணன், திருப்பூர் துரைசாமி, தமிழ் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உலக திருக்குறள் கூட்டமைப்பின் தலைவர் வி.சேகர் (திரைப்பட இயக்குனர்), திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் மாவீரர் நாள் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் ஏராளமான பெண்கள்,குழந்தைகள் உள்ளிட்ட தமிழின உணர்வாளர்கள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

## இராவணன் உருவ எரிப்புக்கு பூரி சங்கராச்சாரி கண்டனம்

தசரா விழாவின்போது இராவணன் கொடும்பாவிகளை எரிக்கும் நடைமுறை, இந்து கலாச்சாரத்திற்கு உட்பட்டது அல்ல என்று பூரி சங்கராச்சாரியாரான அதோக் ஷஜானந்த் தேவ் தீர்த்த மஹராஜ் கூறியுள்ளார். பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் நகரில் உள்ள ஜோடா பதக் அருகே இராவணன் கொடும்பாவி எரிக்கப்படுவதை வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த மக்கள் மீது இரயில் மோதி சுமார் 60 பேர் உயிரிழந்தனர். இதன் பின்னணியில், பூரி சங்கராச்சாரியார் அதோக் ஷஜானந்த் தேவ் தீர்த்த மஹராஜ், மதுரா நகரில் செய்தியாளர்களுக்கு பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், “ தசரா விழாவின்போது, கொடும்பாவி எரிக்கும் பழக்கம் ஒரு பழமைவாதமாகும்; இந்து கலாச்சார அடிப்படைக்கே எதிரானது; இந்து புராணத்தின்படி, இறந்தவர்களுக்கான இறுதிச் சடங்குகள் ஒரே ஒருமுறை மட்டுமே செய்யப்பட வேண்டும்; அவ்வகையில், இராவணனின் இறுதிச் சடங்குகளை இராமபிரான் முன்னிலையில் விபீஷணன் செய்து முடித்து விட்டார்; எனவே, தசரா விழாக்களின்போது இதுபோல் கொடும்பாவிகளை கொளுத்துவதால் பெரிய அளவில் சுற்றுச்சூழலுக்கும் மாசு ஏற்படுகிறது; எனவே, இந்த பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும்” என்று சங்கராச்சாரியார் கூறியுள்ளார். மேலும், “இக்கொடும்பாவி எரிக்கும்நடைமுறையை ஒழித்துக்கட்ட வேண்டும்” என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

## இராமன் கடவுளா? காட்சிப் பொருளா?

உ.பி.யில் இராமனுக்கு கோயில் கட்டி ‘இராமனை’ கடவுளாக்க சங் பரிவாரங்கள் தீவிரம் காட்டி வரும் நிலையில் இராமனுக்கு 211 அடி சிலை வைத்து காட்சிப் பொருளாக்க உ.பி. பா.ஜ.க. முதல்வர் ஆதித்யநாத் முயற்சிக்கிறார் என்று வாரணாசியில் பார்ப்பனர் துவாரக பீட சங்கராச்சாரி தலைமையில் கூடிய சாமியார்கள் உ.பி. அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். இராமன் கடவுளா காட்சிப் பொருளா என்று சங் பரிவாரங்கள் ‘குடுமிபிடி’ சண்டைப் போட்டுக் கொண்டிருந்தாலும் ‘இராமன்’ பா.ஜ.க.வின் தேர்தல் சின்னமாக்கப்படுகிறான் என்பது மட்டும் உண்மை.

## அனுமானுக்கு ‘கம்யூனிட்டி’ சான்றிதழ்

இராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்துக்குப் போன உ.பி. முதல்வர் ஆதித்யநாத் - ஹனுமான் தலித் சமுகத்தைச் சார்ந்தவர் என்று பேசியிருக்கிறார். இதற்கு இராஜஸ்தான் ‘சர்வ பிராமண மகாசபை’ என்ற பார்ப்பன அமைப்பின் தலைவர் சுரேஷ் மிஸ்ரா என்பவர் ஹனுமான் ஒரு ‘பிராமணன்’ அவனை எப்படி ‘தலித்’ என்று கூறலாம் என்று எதிர்ப்பு தெரிவித்து, 3 நாட்களுக்குள் ஆதித்யநாத் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். ‘அனுமானுக்கு’ உ.பி. அரசும், ‘பிராமண’ மகாசபையும் ‘ஜாதிச் சான்றிதழ்’ களை தயாரித்து வைத்திருக்கின்றன போலும். தேர்தல் பிரச்சாரத்தில் மத அடிப்படையில் வாக்கு கேட்கக் கூடாது என்பது தேர்தல் ஆணையத்தின் விதி. ‘அனுமானை’யும் ‘இராமனை’யும் கூறி உ.பி. முதல்வரே ‘இந்து’க்கள் வாக்குகளை வாங்கி விடலாம் என்று பேசி வருவதற்கு தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதோ, நமக்குத் தெரியாது.

இதற்கிடையே உ.பி. மாநிலத்தில் ‘பீம்சேனை’ என்ற தலித் அமைப்பின் தலைவர் சந்திரசேகர், உ.பி. முதல்வருக்கு ஒரு சவால் விடுத்திருக்கிறார். அனுமான் தலித் என்றால், அந்தக் கோயில்களில் ஒரு தலித்தை அர்ச்சகராக்குவீர்களா? அனுமான் கோயில்களை எல்லாம் ‘தலித்’ மக்களிடம் ஒப்படைப்பீர்களா? என்று கேட்டுள்ளார்; நியாயமான கேள்வி. சஞ்சீவி மலையையே தூக்கிக் கொண்டு போனவன் என்றும், இலங்கையை தீயிட்டுப் பொசுக்கியவன் என்றும் அனுமான் இராமாயணத்தில் வர்ணிக்கப்படுகிறான். மரம் வெட்டியாகவும், வேறு ஒரு நாட்டுக்குப் போய் தீ வைத்து எரித்த சர்வதேச பயங்கரவாதியாகவும் சித்தரிக்கப்படும் அனுமானுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்கி ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக சேர்த்துக் கொண்டிருக்கிறார் உ.பி. முதல்வர். இதுவும்கூட சரிதான்!

ஆர்.எஸ்.எஸ்.சில் சேருவதற்கு இதைவிட வேறு தகுதி என்ன வேண்டும்?

## சாக்கடைக் குழியில் இறங்கும் அவலம்: தடுத்து நிறுத்தினர் கழகத் தோழர்கள்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் திருவான்மியூர் பகுதியைச் சார்ந்த தோழர்கள் தேன்ராஜ், தமிழ்தாசன் 13.11.2018 அன்று சென்னை அடையாறு பகுதியில் வடிகால் வாய் குழிக்குள் இறங்கி எந்த ஒரு பாதுகாப்பு கருவிகள் இல்லாமல் வேலை பார்த்து கொண்டிருந்த 2 தொழிலாளர்களை தடுத்து, குழியிலிருந்து வெளியேற்றினர்.

உடனே எந்த பாதுகாப்பு கருவிகளும் தராமல் இது போன்ற செயல்களில் ஈடுபடுத்திய பொறுப்பாளரையும், சென்னை மாநகராட்சி அடையாறு உதவி பொறியாளரையும் நேரில் சந்தித்து எச்சரித்தனர்.

அவர்களும் இதுபோன்ற செயல்கள் தவிர்க்கப்படும் என்றும்... உடனடியாக பாதுகாப்புக் கருவிகளை தொழிலாளர்களுக்கு வழங்கி, குழிக்குள் இறங்கி வேலையில் ஈடுபட்ட செயலுக்கு வருத்தத்தையும் தெரிவித்து கொண்டனர்.

# ஒட்டன் சத்திரத்தில் திராவிட விழுதுகள் நடத்திய ‘பெரியாரியல் பயிற்சி வகுப்பு’



18-11-2018 ஞாயிறு அன்று காலை 10-00 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 4-00 மணிவரை ஒட்டன்சத்திரம், பேருந்து நிலையம் அருகி லுள்ள இராம லிங்கசாமிகள் மடத்தின் அரங்கில், ஒட்டன் சத்திரம் திராவிட விழுதுகள் அமைப்பின் சார்பாக பெரியாரியல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. பயிற்சி வகுப்பில் பங்கேற்க பல் வேறு பகுதிகளில் இருந்து இளைஞர்களும், தோழர்களும், மாணவர்களும் 30 பெண்களும் ஆக 80 பேர் கலந்துகொண்டனர். வீ. அரிஸ்டாட்டில் வரவேற்புரையாற்ற, பேரா. மதியழகன் நோக்க உரையாற்றினார்.

‘ஏன் வேண்டும் இட ஒதுக்கீடு’ என்ற தலைப்பில் பணிநிறைவு பெற்ற கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் மு.செந்தமிழ்ச்செல்வன் எளிய எடுத்துக்காட்டுகளைக் கூறி விளக்கியதோடு, இன்று இட ஒதுக்கீடு சந்திக்கும் நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார். அடுத்ததாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியாரியல் காலத்தின் தேவை என்ற தலைப்பில் கருத்துகளை முன்வைத்தார். நண்பகல் உணவுக்குப் பின்னர் 2-30 மணியளவில் பிற்பகல் அமர்வு தொடங்கியது.

‘திராவிட இயக்க ஆளுமைகள்’ என்ற தலைப்பில் பணி நிறைவுபெற்ற கூட்டுறவு சங்க கூடுதல் பதிவாளர் பாபாண்டியன் பார்ப்பனரல்லாத இயக்கத்தின் தொடக்கப் புள்ளியிலிருந்து தென்னிந்திய நல உரிமைச் சங்க உருவாக்கம், அரசமைத்தமை, நிகழ்த்திய சாதனைகள், அடித்தளமாய் நின்ற ஆளுமைகளின் சிறப்புகளை விரிவாக விளக்கிப் பேசினார். ‘திராவிட விழுது’களின் அமைப்பாளர் மோகன் பேச்சாளர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

வருகை தந்தோரும் கருத்துரைக்கவும், அய்யந் தெளியவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்வு ஒருங்கிணைப்பில் தோழர்கள் பெரியார் நம்பி, சண்முகவேல், வழக்குரைஞர் ஜெயராஜ் ஆகியோர் முன்னின்று பணியாற்றினர்.

பல்வேறு தரப்பினரையும் வருவித்து திராவிட இயக்கங்களின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள், தேவைகள் பற்றிய செய்திகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒட்டன்சத்திரம் திராவிட விழுதுகள் நடத்திய இவ்விரண்டாவது நிகழ்வும் பெரும்பயனை ஏற்படுத்தியது.

## கழகக் கலந்துரையாடல்

**சென்னை :** சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் 11.11.2018 மாலை 6 மணிக்கு தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது. குகன் - கடவுள் மறுப்பு கூறினார். கழகப் பொறுப்பாளர்கள் அன்பு தனசேகர், தபசி குமரன். சுகுமார், கருஅண்ணாமலை, எட்வின் பிரபாகரன், ஜெயபிரகாஷ், செந்தில்குமார், ஏசுகுமார், அருண்குமார், தேன்ராஜ் ஆகியோர் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தனர். புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் இதழ்களுக்கு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்தும், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துதல் மற்றும் தலைமை செயலவை முடிவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

நிறைவாக தோழர்களிடம் கழக ஏடுகளுக்கு புதிய உறுப்பினர்களை சேர்க்க சந்தா புத்தகங்களை தென்சென்னை மாவட்ட கழகத் தலைவர் மா. வேழவேந்தன் ஒப்படைத்து டிசம்பர் மாதம் வரவிருக்கும் பயணக்குழுவிடம் கழக இதழ்களுக்கான சந்தாக்களை ஒப்படைக்கக் கோரி, கூட்டத்தை நிறைவு செய்தார்.

**விருதுநகர் :** விருதுநகர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் 06.11.2018 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கணேசமூர்த்தி வீட்டில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் அல்லம்பட்டி பாண்டி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வடமலைக்குறிச்சி செந்தில், கல்லூரி மாணவர் சுதா, தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர்கள் ஆசிரியர் செயக்குமார், கணேசமூர்த்தி கலந்து கொண்டனர். புரட்சிப் பெரியார் முழக்க வார இதழ் சந்தா மற்றும் ‘நிமிர்வோம்’ மாத இதழ் சந்தாவையும் அதிகளவில் சேர்க்கவும் , தொய்வில்லா கழகப் பணிகளைச் செய்யவும் முடிவெடுக்கப்பட்டது.

## பெருமாள் மலையில் சட்ட எரிப்பு போராளிகள் வீரவணக்க பொதுக் கூட்டம்

பெரியார் அவர்களால் அறிவிக்கப்பட்டு ,பெரியாரியல் தொண்டர்களால் நடந்தேறிய சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கெடுத்து சிறை சென்ற, சிறையிலும், சிறைவாசத்திற்குப் பின்னும் ஜாதியொழிப்பு கொள்கைக்காக உயிர்கொடை தந்தப் பல்லாயிரக் கணக்கான கருஞ்சட்டை வீரர்களுக்கு வீரவணக்கம் செய்யும் விதமாக தி.வி.க. ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக பொதுக் கூட்டம் பெருமாள்மலையில் 26.11.2018 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. காவல் துறையின் அனுமதி மறுப்பால் உள்ளரங்குக் கூட்டமாக மாற்றப்பட்டது. நிகழ்ச்சிக்கு பெருமாள் மலை இராசண்ணன் தலைமை வகிக்க மாநில அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி முன்னிலை வகித்தார். கலைமதி, இராசிபுரம் சுமதி, பெருமாள் மலை கழக ஆதரவாளர் பாரதிதாசன், புரட்சிகர இளைஞர் முன்னணி அற்புதராஜ் உரைக்குப் பின், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன். சட்ட எரிப்புப் போராட்டத்தின் வரலாற்றையும், அச் சமகாலத்தில் நிலவிய ஜாதீயக் கொடுமைகள் குறித்தும் தரவுகளோடு உரையாற்றினார். ஈரோடு மாவட்ட மாணவர்கள் கழகத்தின் சார்பாக அரங்கம்பாளையம் பிரபு மற்றும் சௌந்தர் பரப்புரைச் செயலாள ருக்கு நினைவுப்பரிசு வழங்கினர்.



நிகழ்ச்சியில் வேல்முருகன், ப. குமார், ஜெயகோபால், ஜெய பாண்டி, பிடல் சேகுவேரா, சத்தியராஜ், தம்பிராஜ், செந்தில் குமார், ஜெயபாரதி, ஜீவிதா, வேணுகோபால், பொ.பிரபு, முருகன், இந்தியப் பிரியன், சத்ரு, யாழினி, கமலக்கண்ணன், எழிலன் இறுதியாக தோழர் பி. கிருஷ்ண மூர்த்தி நன்றியுரையுடன் கூட்டம் முடிந்தது.

## குழப்பவாதிகளுக்கு கொளத்தூர் மணி விளக்கம் (9)

# திராவிட ஆட்சியின் சாதனைகளை பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

*“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

புறக்கணிக்கப்பட்ட மக்களைப் பற்றி சிந்தித்தது திராவிடர் இயக்கம் மட்டும்தான். நாம் இப்போது இருக்கிற சூழலில் நமக்கு வாய்த்திருக்கிற நன்மைகள் சிலவற்றைப் பேச வேண்டியுள்ளது. நீண்டகாலமாக இடதுசாரிகள் ஆட்சியில் இருந்த மாநிலம் மேற்கு வங்கம். இப்போதுதான் 10 ஆண்டுகளாக திரிணாமூல் காங்கிரசின் மம்தா பேனர்ஜி ஆட்சியில் இருக்கிறார். அந்த மேற்கு வங்கத்தில் இன்றும் கை ரிக்சா உள்ளது. மனிதனை மனிதன் இழுக்கிறான் என்ற அவல நிலையை நாம் 1970லேயே ஒழித்துவிட்டோம். “எங்கள் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் மேற்கு வங்கத்தின் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அரசு மருத்துவமனைகள் கட்டுவோம்” என்று மம்தா பேனர்ஜி 2004 தேர்தலில் வாக்குறுதி அளித்தார்.

ஆனால் கலைஞர் கடந்த ஆட்சியில் எல்லா மாவட்டத் தலைநகரிலும் அரசு மருத்துவக் கல்லூரி கட்டுவேன் என்று அறிவித்தார். 1970களிலேயே தமிழ்நாட்டின் அத்தனை ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் வந்துவிட்டது. இப்போது 23 அரசு மருத்துவக் கல்லூரிகள் வந்துவிட்டது. ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்திருந்தால் எல்லா மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் வந்திருக்கலாம். அதுமட்டுமின்றி தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஏராளமாக இருக்கிறது. இந்த வேறுபாட்டைப் பார்த்தால்தான் திராவிட இயக்க ஆட்சியும், மற்றவர்களின் ஆட்சியும் எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்நாட்டை மட்டும் தனியாகப் பார்த்தால் நம்முடைய வளர்ச்சி என்னவென்பதை நம்மால் அறிய முடியாது. ஒட்டுமொத்த இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நம்முடைய வளர்ச்சியை என்னவென்பது தெரியும். தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ் அதிகாரியாகப் பணியாற்றியவர் எஸ். நாராயண். அவர் ஒரு தமிழ்நாட்டுப் பார்ப்பனர். மத்திய அமைச்சரவையின் செயலாளராகவும் இருந்தார். ஓய்வுபெற்ற பின்னால் உலக நாடுகளுக்கு சென்று பொருளாதார ஆய்வாளராகவும், ஆலோசகராகவும் இருக்கிறார். இவர் 6 மாதத்திற்கு முன்னால் ‘Dravidian Year’ என்ற நூலை எழுதியிருக்கிறார். அதில் திராவிட இயக்க ஆட்சியில் துணை ஆட்சியராக, மாவட்ட ஆட்சியராகப் அரசு செயலாளராகப் பணியாற்றிய போது அவருக்கு கிடைத்த அனுபவங்களை எழுதியுள்ளார். திமுக ஆட்சிக்கு வந்த முன்பும் அவர் பதவியில் இருந்தார். ஆட்சிக்கு வந்த பின்பும் இருந்தார்.

“முன்பெல்லாம் ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு குறை இருக்கும், அதை அரசால் தீர்க்க முடியுமென்றால், அரசு அதிகாரிகள் அறிக்கை அனுப்புவார்கள், எங்களுக்கு அறிக்கை வரும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பின்னால்தான் கட்சியின் பிரதிநிதிகள் மக்களின் பிரச்சனைகளை எங்களிடம் எடுத்துவந்து பேசத் தொடங்கினார்கள். அரசு அதிகாரிகளிடமிருந்து நாங்கள் பெற்ற குறைகளை விட, கட்சியின் பிரதிநிதிகள் எடுத்து வைத்ததுதான் மிக அதிகம். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, கட்சியின் அனைத்து நிலை பொறுப்பில் இருப்பவர்களும் வந்து எளிய மக்களின் கோரிக்கையை அன்றாடம் எங்களிடம் பேசியதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்னர்தான்” என்று பதிவு செய்திருக்கிறார் நாராயணன். தமிழ்நாட்டை விட்டு வெளியே போன பின்புதான் தமிழ்நாட்டை அவர் புரிந்துகொள்கிறார். ஒரு பெரிய நூலில் அதையெல்லாம் எழுதி வெளியிடுகிறார்.

தமிழர்கள் இந்தி படிக்காததால் நமக்கு வேலையே கிடைக்கவில்லை என்று சிலர் பேசுகின்றனர். ஆனால் இப்போது இந்தி பேசுபவர்கள் எல்லாம் வேலைக்காக தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். 2017ஆம் ஆண்டில் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை இந்தியா முழுவதும் ஆய்வு செய்து ஒரு அறிக்கையை வெளியிட்டது. இந்தியா முழுவதும் உள்ள வேறுபாடுகளை இந்த ஆய்வில் சொல்லியிருந்தார்கள். பள்ளிக் கல்வியை முடித்து கல்லூரி சேருபவர்கள் இந்தியாவில் சராசரியாக 20.4 விழுக்காட்டினர் உள்ளார்கள் என்று இந்த ஆய்வில் சொல்லப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் சராசரியாக 38.2 விழுக்காட்டினர் பள்ளி முடித்து கல்லூரி செல்கின்றனர். இந்திய சராசரியைக் காட்டிலும் இருமடங்கு தமிழகத்தில் பள்ளி முடித்த மாணவர்கள் கல்லூரி சேருகின்றனர். ஆனால் மோடி 15 வருடம் முதல்வராக இருந்து ஆட்சி செய்த குஜராத்தில் 17 விழுக்காட்டினர்தான் கல்லூரி சேருகின்றனர். மத்தியப் பிரதேசத்தில் 17 விழுக்காட்டினரும், உத்தரப் பிரதேசத்தில் 16 விழுக்காட்டினரும்தான் கல்லூரியில் சேருகின்றனர்.



**இந்திய சராசரியைக் காட்டிலும் இருமடங்கு தமிழகத்தில் பள்ளி முடித்த மாணவர்கள் கல்லூரி சேருகின்றனர்.**

இந்த ஆய்வில் கல்வியின் தரத்தின் அடிப்படையில் இந்தியா முழுவதும் 100 சிறந்த கல்லூரிகளை தேர்ந்தெடுத்தார்கள். அதில் தமிழ்நாட்டில் இருந்து 37 கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. குஜராத்தில் 3 கல்லூரிகள் மட்டும் தேர்வானது. 100 சிறந்த பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாட்டில் 22 பொறியியல் கல்லூரிகள் தேர்வானது. குஜராத்தில் 5, மத்தியப் பிரதேசத்தில் 3, பீகாரில் 1, ராஜஸ்தானில் 3 கல்லூரிகள் தேர்வானது. இவையெல்லாம் பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்கள். 100 சிறந்த பல்கலைக் கழகங்களின் பட்டியலில் தமிழ்நாட்டில் 24 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளது. குஜராத்தில் 2, மத்தியப் பிரதேசத்தில் 0, பீகாரில் 0, ராஜஸ்தானில் 4 பல்கலைக்கழகங்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இவர்கள்தான் திராவிட இயக்க ஆட்சியில் எல்லாம் தரமில்லாமல் போய்விட்டது என்கிறார்கள்.

மகப்பேறு இறப்பு விகிதம், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டுதான் அமர்த்தியா சென் போன்ற பொருளாதார அறிஞர்கள் தங்கள் ஆய்வை எழுதினர். தமிழ்நாட்டில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் 1000க்கு 21ஆகவும், குஜராத்தில் 36 ஆகவும், மத்தியப் பிரதேசத்தில் 54ஆகவும், உத்தரப் பிரதேசத்தில் 50ஆகவும் உள்ளது. இந்திய சராசரி 40ஆக உள்ளது. பிரவச காலத்தில் இறக்கும் தாய்மார்களின் சராசரி இறப்பு விகிதம் இந்திய அளவில் 1 லட்சத்துக்கு 167ஆக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் 73 பேராக மட்டுமே உள்ளது. உத்தரப் பிரதேசத்தில் 285 பேராகவும், மத்தியப் பிரதேசத்தில் 221 பேராகவும், குஜராத்தில் 112 பேராகவும் உள்ளது.

இந்தியா முழுவதும் சராசரியாக 50 விழுக்காட்டினர் மட்டும்தான் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் 86.7 விழுக்காட்டினர் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர். குஜராத்தில் 55 விழுக்காட்டினரும், மத்தியப் பிரதேசத்தில் 48 விழுக்காட்டினரும், உத்தரப் பிரதேசத்தில் 25 விழுக்காட்டினரும், ராஜஸ்தானில் 31 விழுக்காட்டினரும் மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர். கல்வி விகிதாச்சாரத்தில் தமிழ்நாடு 80க்கும் அதிகமான விழுக்காட்டைக் கொண்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் வட இந்திய மாநிலங்களைக் காட்டிலும் 2 மடங்கு உயர்ந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. நமக்குப் போட்டியாக கேரளாதான் இருக்கிறது. ஒன்றில் நாம் முதலில் இருந்தால் மற்றொன்றில் கேரளா முதலில் இருக்கும். வட இந்தியாவில் இமாசலப் பிரதேசம் மட்டும்தான் போட்டியாக இருக்கிறது.

தமிழ்நாடு கண்ட இந்த வளர்ச்சியை 50 ஆண்டு கால வளர்ச்சியாக எடுத்துக்கொண்டாலும்கூட 1967க்குப் பின்னர்தான் நடந்திருக்கிறது. இந்த 50 ஆண்டுகளில் ஜெயலலிதாவின் ஆட்சியைத்தாண்டி (Beyond Amma) இந்த மாற்றங்கள் நடந்திருக்கிறது என்று அமர்த்தியா சென் போன்ற பொருளாதார அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே இப்படிப்பட்ட ஆட்சி அமைப்பினுடைய காரணம், அடிப்படை சுயமரியாதை இயக்கத்திலிருந்து வந்த சிந்தனை. உன்னுடைய ஆட்சி மூன்றாந்தர ஆட்சி என்று ஹண்டே ஒருமுறை கலைஞரைப் பார்த்து சொன்னார். அதற்கு கலைஞர், “தவறாக சொல்லிவிட்டார் நண்பர், எங்களுடைய ஆட்சி நான்காம் தர ஆட்சி. பிராமண, சத்திரிய, வைசிய வருணாசிரம வரிசையில் 4ஆம் ஜாதியான சூத்திரர்களால் சூத்திரர்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி என்னுடைய ஆட்சி” என்று சட்ட மன்றத்தில் சொன்னார். சூத்திரர்களுக்காகத்தான் நாங்கள் ஆட்சி நடத்துகிறோம், அந்த மக்களுடைய மேம்பாடுதான் எங்கள் குறிக்கோள் என்று சிந்திக்கிற பார்வை கொண்ட அரசாக கலைஞரின் அரசு இருந்தது.

அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் சில இடங்களில் சிறு சிறு வேறுபாடுகள் இருக்கும். “பட்டியலின மக்களையெல்லாம் ஒரு பகுதியில் வாழச் செய்யுங்கள். எண்ணிக்கையில் நாங்கள் பெருகி நின்றால் பாதுகாப்பாக உணர்வோம்” என்று அம்பேத்கர் சொன்னார். ஆனால் பெரியார், “பட்டியலின மக்களை பொதுமக்கள் மத்தியில் வாழ வையுங்கள். ஊர் என்றும், சேரி என்றும் பிரிக்க வேண்டாம். ஊரில் இருக்கிற காலி இடங்களில், இடம் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை அடுக்குமாடி கட்டடங்களாக கட்டிக் கொடுங்கள்” என்று சொன்னார். குடிசை மாற்று வாரியத்தை அப்படிப் பார்க்கலாம். ஆனால் சமத்துவபுரம் என்ற சிந்தனை அம்பேத்கரின் சிந்தனையையும் உள்ளடக்கியது. சமத்துவபுரங்களில் 40 விழுக்காடு பட்டியலின மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்பது அதிலுள்ள ஆணை. எல்லா ஜாதியினரும் சமத்துவபுரத்தில் சேர்ந்து வாழ் கின்றனர். அதே சமயத்தில் பட்டியலின மக்கள் அங்கு பெரும்பான்மை எண்ணிக்கையில் பாதுகாப்பாகவும் வாழ்கின்றனர். 10 விழுக்காடு இடத்தை உயர் ஜாதியினருக்கும், சிறுபான்மையினருக்கும் வழங்கி அவர்களையும் சமத்துவபுரத்தில் வாழவைத்தார் கலைஞர்.

இந்தியாவில் வேறெங்கும் யாரும் இப்படி அமைத்ததில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்போது தமிழ்நாட்டில் 200க்கும் அதிகமான சமத்துவபுரங்கள் இருக்கிறது. மொழி அடிப்படையிலானாலும் சரி, அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டமாக இருந்தாலும் சரி, பெண்களுக்கான சொத்துரிமை வழங்கியதாக இருந்தாலும் சரி இந்தப் பார்வை கொண்ட முதல் இயக்கமாக திராவிட இயக்கம்தான் இருந்தது. இந்தியாவில் பெண்களுக்கான சொத்துரிமை சட்டம் முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் கொண்டுவரப்பட்டது. 1989ஆம் ஆண்டில் இதை கலைஞர்தான் கொண்டுவந்தார். ஆனால் அதற்குப் பிறகு 16 ஆண்டுகள் கழித்து 2005ஆம் ஆண்டில்தான் அகில இந்திய அளவில் பெண்களுக்கான சொத்துரிமை சட்டம் வந்தது.

பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பதை மிக நீண்டகாலமாகப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் பெண்களுக்கு அரசுப் பணிகளில் 30 விழுக்காடும், உள்ளாட்சி தேர்தலில் 33 விழுக்காடும் இட ஒதுக்கீடு வழங்கி சட்டம் நிறைவேற்றினார். இன்னமும் இந்தியாவில் இந்த இரண்டிலும் வேறெங்கும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு இல்லையென்பதையும் யோசித்துப் பார்த்தால் இதன் சிறப்பு புரியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக தொகுதி நிதி ஒதுக்கீடு என்பதை முதன்முதலாகக் கலைஞர்தான் தமிழ்நாட்டில் வழங்கினார். இதனுடைய செயல்பாடுகளை பார்த்த பிறகு 10 வருடம் கழித்து இந்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கும் முறையைக் கொண்டு வந்தது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் கடனை உரிய நேரத்தில் கட்டினால் வட்டி இல்லை என்ற சட்டத்தையும் முதன்முதலில் தமிழ்நாட்டில் கலைஞர் கொண்டு வந்தார். இன்னும் ஏராளமான திட்டங்களைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். எந்த மக்களுக்கான இயக்கமாக

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு அழைக்கிறது

# ஆரியம் மிரள, கருப்பர்கள் கூட்டம் திரளட்டும்!



இந்தியா முழுதும் பிற்போக்குத்தனங்களும், சாதிய மேலாதிக்கமும் நிறைந்திருக்கிறது. ஆரியப் - பார்ப்பனிய - இந்துத்துவ கும்பல் இந்திய ஒன்றியத்தின் அனைத்துத் தேசிய இனங்களின் வளங்களையும் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. மதத்தின் பெயரால் நாள்தோறும் கலவரங்களும், படுகொலைகளும் இந்தியா முழுவதும் நிகழ்த்தப்படுகின்றன. மாட்டுக் கறி வைத்திருந்தவர்கள் என்று சொல்லி ஒடுக்கப்பட்ட மக்களையும், சிறுபான்மை மக்களையும் காவி வெறிக் கும்பல் அடித்துக் கொலை செய்கிறது. ஆரியப் - பார்ப்பனியத்தின் சூழ்ச்சிப் போக்குகளிலிருந்து தமிழ்நாட்டைக் காத்திட தன் இறுதி மூச்சு வரை போராடியவர் தந்தை பெரியார்.

ஆனால், அத்தகைய தமிழ்நாட்டினைக் கூறுபோட்டு விற்றிட இன்றைக்கு ஆரியப் - பார்ப்பனிய இந்துத்துவக் கும்பல்களை பெருமளவில் களமிறங்கி யிருக்கின்றன. தமிழ்நாட்டின் பண்பாட்டையும், இயற்கை வளங்களையும், தனித் தன்மைகளையும் இந்தக் கும்பல்களிடமிருந்து காக்க வேண்டிய கடமை தமிழ்நாட்டினர் அனைவருக்கும் இருக்கிறது. தமிழ்நாட்டு வளங்களைக் கார்ப்பரேட்டுகளுக்கு சுரண்டிக் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ்.- இந்துத்துவக் கும்பலை அச்சுறுத்தும் பெரு நெருப்புகளுள் தந்தை பெரியார் எனும் ஆயுதம் முதன்மையானது.

தமிழ்நாட்டினை முழுமையாக அடிமைப்படுத்தி ஆக்கிரமிக்க இன்று பார்ப்பனியம் சதி செய்து கொண்டிருக்கிறது.

- இந்தியையும், சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டின் மேல் திணித்துக் கொண்டிருக்கிறது.
- காவிரி கடைமடைப் பகுதியினை மீத்தேன் மற்றும் ஹைட்ரோ கார்பன் எடுத்து பாலைவனமாக்கும் சதி நடக்கிறது.
- தேனியில் நியூட்ரினோ திட்டத்தினை அமைத்து அறிவியல் அழிவிற்கான சோதனைக் கூடமாகத் தமிழ்நாட்டை மாற்றுகிறார்கள்.
- தமிழர் கடலை அன்னிய நிறுவனங்களின் வேட்டைக் காடாக மாற்ற, மீனவர்களை வெளியேற்றும் சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள்.
- நீட் தேர்வினைத் திணித்தும், புதிய கல்விக் கொள்கை என்கிற பெயரிலும் தமிழ்நாட்டின் கல்வி உரிமையை முழுமையாய்ப் பறித்து வருகிறார்கள்.
- ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு என்கிற பெயரினால் தமிழ்நாட்டின் நிதி வலிமை முறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் இந்தியப் பார்ப்பனியம் தன் அதிகாரத் திமிரோடு செயல்படுத்திக் கொண்டுள்ளது.

இந்த அநீதிகளையெல்லாம் எதிர்த்து நின்று முறியடிக்காவிட்டால் நம் கண் முன்னே தமிழினம் தமிழ்நாட்டில் வீழ்வதை நாம் பார்க்க நேரிடும்.

- **தமிழினத்தின் எதிரிகளுக்குச் சிம்மசொப்பனமாக இன்றும் இருப்பவர் பெரியார்.**
- **அவரின் கருப்புச் சட்டையும் கைத்தடியும் நமக்குப் போர்க் கருவிகள்.**
- **கடந்த காலங்களில் கருப்பு சட்டைகள் களம் கண்ட இந்த மண்ணில் இன்று காவிக் கூட்டங்கள் ஊர்வலம் நடத்திக் கொண்டிருக்கின்றன.**
- **“காவி எங்கள் நிறமல்ல! கருப்பே எங்கள் நிறம்” என்பதை உரக்கச் சொல்ல வேண்டிய தேவை நமக்கிருக்கிறது.**

தமிழ்நாட்டின் வளங்கள் தமிழருக்கே! தமிழ்நாடு தமிழருக்கே! என்ற பெரியாரின் கொள்கைகளை அடையாளப்படுத்தும், கருப்புச் சட்டையுடன் நாம் திரள வேண்டியது வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. பெரியாரிய உணர்வாளர்கள் தங்கள் வலிமையினைத் திருச்சியில் காட்டுவோம்! பல்லாயிரக்கணக்கில் தோழர்கள் திருச்சி மண்ணில் திரண்டு நிற்போம்!

ஆரியம் மிரள கருப்பர்கள் கூட்டம் திரளட்டும்! சாதி, மதங்களைத் தூக்கியெறிந்திடும் தமிழர்களாய்த் திரள்வோம்! இயக்கம் - கட்சி அடையாளங்களைக் கடந்து கருப்புச் சட்டை திருச்சியை நிரப்பட்டும். பெண்களே! இளைஞர்களே! மாணவர்களே! அனைவரும் வாருங்கள்.

சாதி, மதமற்ற, பெண் அடிடைத்தனம் ஒழித்திடும், வல்லரசியத்தை எதிர்த்திடும் உழைக்கும் தமிழக மக்களுக்கான தமிழ்நாட்டினை மீட்போம்!

**– பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு**

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது என்ற சிந்தனையை நெஞ்சில் தாங்கியவராகத்தான் கலைஞர் செயல்பட்டார். ஒவ்வொரு இடத்திலும் அதைப் பேசியே வந்திருக்கிறார். அரசியலுக்கு வந்துவிட்டாலே பொது இடங்களில் வெளிப்படையாக பேசுவதைப் பலர் நிறுத்திக் கொள்வதைப் பார்க்கிறோம். ஆனால் ராமன் எந்த என்ஜினியரிங் கல்லூரியில் படித்துவிட்டு பாலம் கட்டினான் என்று கேட்டார் கலைஞர். வட இந்தியாவிலோ பொது மக்கள் ராமனைப் பற்றி பேசினாலே அடித்துக் கொல்கிறார்கள். அவ்வளவு ஏன், குரங்கை அடித்தாலே நம்மை அடிக்க வருவார்கள். அதனால்தான் அம்பேத்கர் அவர்களை பழமைவாதிகள் என்றும் - நம்மை புதுமைவாதிகள் என்றும், அவர்களை மூட நம்பிக்கைவாதிகள் என்றும்- நம்மை பகுத்தறிவுவாதிகள் என்றும் சொன்னார்.

இந்த பகுத்தறிவை மேலும் மேலும் வளர்த்தெடுத்தலில் கலைஞருக்கு பங்கு உண்டு. பெரியாருக்கு ஒரு உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது. ”பட்டியலின மக்களை சட்ட மன்றத்தில் பார்த்துவிட்டேன். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளாகப் பார்த்துவிட்டேன். ஆனால் 110 ஆண்டுகால வரலாறு கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட நீதிபதியாக இல்லையே” என்று தன்னுடைய வருத்தத்தை தெரிவித்து கலைஞரிடம் வேண்டுகோளாக வைத்தார். அந்த வாரத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு, திண்டுக்கல்லில் மாவட்ட நீதிபதியாக இருந்த ஏ.வரதராஜன் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியானர். இந்தியாவிலேயே உயர் நீதிமன்ற நீதிபதியான முதல் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர் இவர்தான். அதன் தொடர்ச்சியாக அவரே டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் முதல் பட்டியலினத்தைச் சேர்ந்த நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார். அந்தப் பெருமையை உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர். அதற்குக் காரணம் திராவிட இயக்கச் சிந்தனை.

1975ஆம் ஆண்டில் குரூப் 1 சர்வீஸ் நடந்தது. அதில் 112 இடங்களில் ஒரு இடத்தைக் கூட ஒரு பார்ப்பனனுக்கோ, உயர் ஜாதிக்காரனுக்கோ கொடுக்கவில்லை. பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் அதிலும், பிற்படுத்தப்பட்ட மக்களில் குரலற்ற மக்களாக உள்ளவர்களுக்கும், குறவர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும், கல் உடைக்கும் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. அப்போதுதான் முதன்முதலில் குரூப் 1 சர்வீசில் இவர்கள் வந்தார்கள். பார்ப்பனர்களுக்கு அதிகக் கோபம் இங்குதான் வந்தது. பெரிய ஜாதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு தராமல் சிறிய ஜாதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கொடுத்திருக்கிறாரே என்றும் கூட சிலருக்கு கோபம் வந்திருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு சமூக நீதி சிந்தனை கொண்டவராய், திராவிட இயக்க சிந்தனையாளராய் கருஞ்சட்டைக் கலைஞராய் இருந்தார். நாமும் அப்படியிருக்க முயல்வோம். அப்படியிருப்பதற்கான உதவிகளைச் செய்வோம். அண்ணா ஆட்சிக்கு வந்து குறுகிய காலம்தான் வாழ்ந்தார் என்றாலும், அவர் ஆட்சியில் பல சாதனைகளை செய்தார். கலைஞரின் ஆட்சிக்கு அடிக்கோல் நாட்டியது திராவிடர் இயக்கமும், அண்ணாவின் ஆட்சியும்தான். நாம் இப்போது எதிர்பார்ப்பதும் - காத்திருப்பதும் கலைஞரின் வழியில் பகுத்தறிவு பார்வையோடும், பார்ப்பன எதிர்ப்புப் பார்வையோடும், அடித்தட்டு மக்களைப் பற்றிய சிந்தனையோடும் நடக்கிற ஆட்சி வரவேண்டும் என்பதே. அதைத்தான் விரும்புகிறோம், வரும் என்று நம்புகிறோம்.

**(நிறைவு)**

**தொகுப்பு: ர.பிரகாசு.**

---

## 75 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு மா.பா. மணிகண்டன் விடுதலை

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு போராட்டத்தில் கடந்த மே 22ந் தேதி நடந்த துப்பாக்கிச் சூட்டை கண்டித்து மதுரையில் நடைபெற்ற போராட்டங்களில் ஏற்பட்ட வன்முறைக்கு மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் மா.பா. மணிகண்டன் தான் காரணம் என காவல்துறை பொய் வழக்கு போட்டு கடந்த 2018ஆகஸ்ட் 23ந் தேதி அவரை கைது செய்து சிறையில் அடைத்தது அவர் வெளியில் வரக்கூடாது என்பதற்காக முதலில் போடப்பட்ட வழக்கில் பிணை கிடைத்தும் மேலும் பொய் வழக்குகளை போட்டு வெளியில் வரவிடாமல் தடுத்தது காவல்துறை. அதனை எதிர்த்து உயர் நீதிமன்றம் வரை சென்று காவல்துறையின் பொய் வழக்குகளை முறியடித்து நவம்பர் 9ந் தேதி காலை 7.மணிக்கு மதுரை மாவட்ட செயலாளர் மா.பா. மணிகண்டன் 75 நாள் சிறையிலிருந்து விடுதலையானார்.

மா.பா. மணிகண்டனை அமைப்பு செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் சிறை வாசலில் வரவேற்றனர். மா.பா. மணிகண்டன் சிறைபட்டதிலிருந்து அவரது விடுதலைக்காக மதுரை மாவட்ட பொறுப்பாளர் காமாட்சி பாண்டி, அழகர் பிரபாகர், மாப்பிள்ளை சாமி, செந்தில், கணேஷ், மீ.த. பாண்டியன், மேரி, மருத்துவர் ஆனந்தி ஆகியோர் நீதிமன்ற பணிகளுக்கு உதவியாக பணியாற்றினர். நீதிமன்றத்தில் வழக்கறிஞர் கிருஷ்ணன் மற்றும் திருமுருகன் ஆகியோர் இவ்வழக்குகளுக்காக வாதாடி பிணையில் விடுதலை செய்ய உதவி புரிந்தனர். விடுதலையான மா.பா.மணிகண்டன், விடுதலையானதும் பெரியார், அம்பேத்கார் சிலைக்கு மாலை அணிவித்தார். அதன் பின் பிணை கிடைக்க உதவிய முத்துராகு இல்லத்திற்கு சென்று சந்தித்து நன்றி தெரிவித்து விட்டு மா.பா. இல்லத்துக்கு அழைத்துச் சென்று குடும்பத்தினரை சந்தித்து அளவளாவி விட்டு கழக பொறுப்பாளர்கள் விடை பெற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th December 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN